REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 5563

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: ஆடி 27உ வெள்ளி (12—8—55) ★ ★ வெளியூர்: ஆடி 28உ சனி (13—8—55) [இதழ் 51

தவளையின் 'இன உணர்வு'!

பரோடாவிற்கு அருகில் உள்ள அமோத் என்னுமிடத்தில், தன் குஞ்சுத் தவளையைக் காப்பாற்ற தவளை ஒன்று, நல்ல பாம்பின் உயிரைக் குடித்த சம்பவம் நிகழ்ந்திருக்கிறதாம்.

தன் குஞ்சுத் தவளையை விழுங்க நல்லபாம்பு எத்தனித்ததாம். பாம்பின் வாயில் தன் குஞ்சு தவிப்பதைக் கண்ட தவளை, ஒரே தாவாக தாவி, பாம்பின் கழுத்தைக் கவ்விக்கொண்டதாம். பாம்பு, குஞ்சுத் தவளையை விழுங்க முடியாதது மட்டுமின்றி, பெரிய தவளையின் இரும்புப் பிடியிலிருந்து தன் கழுத்தை மீட்க முடியாது செத்து ஒழிந்ததாம். பாம்பு மடிந்தபட்டதும் பெரிய தவளை பாம்பின் வாயிலிருந்த தன் குஞ்சுத் தவளையை வெளியே மீட்டதாம்!

'சென்னையின் கோரிக்கை நியாயமானதே!'

இரண்டாம் திட்டம் பற்றி டாக்டர் ஏ. ராமசாமி கருத்து

திட்டத்தைச் சுருக்கக் கூடாதென மக்கள் சபை உறுப்பினர்கள் ஒருமுகக் குரல்!

புதுடில்லி, ஆக. 11—

"சென்னை சர்க்கார் தயாரித்துள்ள தொழில் அபிவிருத்தித் திட்டங்கள் உண்மை நிலைக்கு ஒத்தது—செய்து முடிக்கவல்லது," என்பதாக, டாக்டர் ஏ. இராமசாமி கருத்தறிவித்திருக்கிறார்.

"சென்னை மக்கள் வரி விதிப்புகளைத் தாங்கிக்கொண்டிருப்பதின் மூலம் செய்துள்ள தியாகம் மகத்தானது; மக்கள் தொகை விகிதாச்சாரப்படி பார்த்தாலுங்கூட, சென்னை சர்க்கார், தேசிய அபிவிருத்தித் திட்டங்களில் நியாயமான பங்கு கேட்பதைப் புறக்கணித்துவிட முடியாது," என்றும், சென்னை திட்டம் பற்றி கருத்தறிவிக்கப்பட்டிருக்கிறது.

சென்னை சர்க்காரின் திட்டத்தினை விவாதிக்க சென்னையைச் சேர்ந்த சுமார் 30 மக்கள் சபை உறுப்பினர்கள் அடங்கிய கூட்டம் ஒன்று நடைபெற்றது.

கூட்டத்திற்கு வந்திருந்த அத்தனை மக்கள் சபை உறுப்பினர்களும், சென்னை சர்க்காரின் 394 கோடி ரூபாய் பெறுமான திட்டத்தினை ஆதரித்திருக்கின்றனர்.

'திட்டத்தில் 50 சத விகிதம் தான் ஏற்றுக்கொள்ள முடியும்,' என்று, ஏதேனும் வழக்கமான நடைமுறைகளைக் காட்டி திட்டத்தை வெட்டுவது, சென்னைபோன்று தொழில் துறையில் ஏற்கனவே பின்தங்கிக் கிடக்கும் ஒரு மாநிலத்தின் துயரங்கள் நீடிக்கவே உதவுவதாயிருக்கும்—என்று, பொதுவாக எல்லா உறுப்பினர்களும் கருத்தறிவித்திருக்கின்றனர்.

கூட்டத்தில் மத்திய மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி, உதவி மந்திரிகள் அழகேசன், மரகதம் சந்திரசேகரன், மற்றும் டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி உட்பட, கட்சி வேறுபாடற்ற பல உறுப்பினரும் பங்கு பெற்றிருக்கின்றனர்.

சபையில் பேசுவதற்கு உறுப்பினர்களே இல்லை!

கம்பெனி மசோதா விவாதத்தின்போது விரும்பத்தகாத சம்பவம்

புதுடில்லி, ஆக. 10—

இன்று மக்கள் சபையில் கம்பெனிகள் மசோதா தாக்கல் செய்யப்பட்டபோது, மசோதா மீது பேசுவதற்கு உறுப்பினர்களே இல்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

மக்கள் சபையில் இதுவரை வேறெந்த மசோதாவிற்கும் தரப்படாத அளவு, சுமார் 25 மணி நேரம், இந்த மசோதா விவாதத்திற்கென ஒதுக்கப்பட்டிருக்கிறது.

'இன்று, மூன்று மணி நேரம் மட்டுமே சபையில் இந்த மசோதா மீது விவாதம் நடைபெற்றிருக்கிறது.

சபைக்குத் தலைமை தாங்கிய திருமதி ரேணு சக்ரவர்த்தி, 'இன்றே மசோதாவின் முதல் வாசிப்பு' முடிந்துவிடும் என்று, உறுப்பினர்களை எச்சரித்திருக்கிறார்.

(4-ம் பக்கம் பார்க்க.)

மடங்களிடம் சர்க்கார் கடன் கேட்கிறது

மாநிலத்தில் உள்ள கோவில்கள், மடங்கள் ஆகியவற்றின் நிர்வாகத் தலைவர்களுக்கு, சென்னை சர்க்கார் எழுப்புகிற ஏழு கோடி ரூபாய் கடனுக்கு, குறைந்தது ஒரு கோடி ரூபாயேனும் கடன் தந்து உதவுமாறு, மதபரிபாலன இலாகாத் தலைவர், வேண்டுகோள் விடுத்துள்ளார் என்று தெரிகிறது.

நாகர் மலைசாதியினர் நடத்தி வரும் சுதந்திரக் கிளர்ச்சிக்கு, அன்னிய ஏஜெண்டுகள் நேர்முகமாகவோ, அல்லது மறைமுகமாகவோ ஆதரவு தருகிறதாக இந்திய சர்க்காருக்கு எவ்விதத் தகவலும் கிடைக்கவில்லை என்று மக்கள் சபையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

'வள்ளுவர் வகுத்த வாழ் நெறி'

'மக்களிடம் பரப்பும் பொறுப்பு மாணவர்களுடையதே!'

பச்சையப்பன் கல்லூரியில் பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன்

"உலக மக்கள் அனைவருக்கும் பொருந்தக்கூடிய வள்ளுவர் வகுத்த வாழ் நெறியை, நாட்டு மக்கள் எல்லோரிடையேயும் பரவச்செய்ய மாணவர்கள் கடமைப்பட்டுள்ளார்கள்; மக்களிடையே நல்லறிவையும், முறையையும், நெறியையும் பரப்ப வேண்டிய பணியினைச் செய்வதில் மாணவர்கள் பங்குகொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள்; நாட்டை சீர்திருத்தப் பாதை நோக்கி அழைத்துச்செல்லும் பணிகள் ஏராளமாக மாணவர்களை எதிர்நோக்கிக்கொண்டிருக்கின்றன; அறிவில்லாதவர்களுக்கு அறிவைப் புகட்ட வேண்டிய நற்பணி மாணவர்களை எதிர்நோக்கியிருக்கிறது; 100-க்கு 83 சத விகிதத்தில் எழுதப் படிக்கத் தெரியாத நிலையிலுள்ள நமது நாட்டுப் பாமர மக்களை தங்கள்பால் ஈர்த்து, அவர்களுக்கு அறிவு புகட்ட மாணவர்கள் முன்வர வேண்டும்; அந்தப் பணியினைத் திறம்படச் செய்து முடிக்கும் பெரும் பொறுப்பு மாணவர்கள் மீது சுமத்தப்பட்டிருக்கிறது; இதனை மாணவர்கள் உணர்ந்து, அதற்கான வழியில் முயற்சி எடுத்துச் செயலாற்றக் கேட்டுக்கொள்கிறேன்."

—இவ்வாறு, தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், 11—8—55 மாலை 3½ மணியளவில், சென்னை, சேத்துப்பட்டு பச்சையப்பன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற கல்லூரி தமிழ் மன்றத்தைத் திறந்துவைத்து 'வள்ளுவர் வகுத்த வாழ் நெறி' எனும் தலைப்பில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசியதாவது:—

"உலகில், மக்கள் வாழ்க்கையில் கடைப்பிடிப்பதற்காகப் பல பேர், பல இடங்களில், பற்பல நேரங்களில், பலப்பல விதமாக வாழ்க்கை நெறியினை அமைத்திருக்கிறார்கள். அவற்றுள் ஒன்றுதான் வள்ளுவர் வகுத்த 'வாழ் நெறி'யும்.

"மற்றவர்களால் வகுக்கப்பட்ட வாழ் நெறியையும், வள்ளுவர் வகுத்த வாழ்நெறியையும் நாம் ஒப்பிடுகையில், வள்ளுவன் வாழ் நெறிதான் உலகில் உள்ள எந்த நாட்டு மக்களுக்கும், எந்தக் காலத்திற்கும் பொருந்தக்கூடிய ஒன்றாக அமையக்கூடியதாக இருப்பதை நாம் காண்கிறோம்.

"நமது நாட்டில் பற்பல இலக்கியங்கள் உள்ளன; அந்த இலக்கியங்கள் ஒவ்வொன்றும் பலப்பலரால், மாறுபட்ட காலங்களில் இயற்றப்பட்டுள்ளன. அந்த இலக்கியங்களை நாம் பார்க்கும்போது, அவைகளில் காணப்படும் 'வாழ் நெறி,' ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே பொருந்துவதாக இருக்கும்; அல்லது, ஒரு குறிப்பிட்ட ஊருக்கு மட்டுமே பொருந்துவதாக இருக்கும்; அதுவுமில்லாவிட்டால், ஒரு குறிப்பிட்ட ஆளை

(4-ம் பக்கம் பார்க்க)

சர்க்கார் ஊழியர் மேற்கொள்ளும் 'நேரடி நடவடிக்கை'!

தாடி வளர்ப்பர்! அரைகுறை ஆடையில் அலுவலகம் செல்வர்!

சம்பள உயர்வு பெற புதுவகை முயற்சி

புதுடில்லி, ஆக. 11—

"தாடி வளர்ப்போம்! அரைகுறையாக ஆடை அணிந்து அலுவலகத்திற்கு வருவோம்! எங்கள் குறைகளைப் போக்க முன்வராத அரசாங்கத்தை எதிர்த்து நாங்கள் மேற்கொள்ளும் 'நேரடி நடவடிக்கை' இதுதான்,"

என்று, மத்திய சர்க்கார் அலுவலக மூன்றாம் பிரிவு குமாஸ்தாக்கள் சங்கத் தலைவர் ஓம்கார்நாத் சர்மா என்பார் தெரிவித்திருக்கிறார்.

வரும் ஆகஸ்டு 16-ந் தேதி முதல் இந்த நேரடி நடவடிக்கையில், சர்க்கார் ஊழியர்கள் ஈடுபடுவராம்.

"சர்க்கார் ஊழியர்களின் சம்பள விகிதங்களை திருத்தியமைக்கும் பிரச்சினை சர்க்காரின் ஆலோசனையிலிருக்கிறது என்று சர்க்கார் நெடுநாட்களாக கூறிவந்திருக்கிறது; ஆனால், இன்றுவரை அவை திருத்தியமைக்கப்படவில்லை; ஒரு சிலருக்குமட்டும், வருடாந்தர சம்பள உயர்வு தரப்பட்டிருக்கிறது; எனவே, எங்களின் நியாயமான கோரிக்கைகளை வலியுறுத்தவே இந்தவித நேரடி நடவடிக்கையில் ஈடுபடுவதைத் தவிர வேறு வழி இல்லை,"

என்று அந்தச் சங்கத் தலைவர் குறிப்பிட்டிருக்கிறார்.

சூரத், ஆக. 10—

17 வயதுக் குழந்தையொன்று 55 வயதான பெண்மணியின் கருப்பையிலிருந்து இரண சிகிச்சையின் மூலம் வெளியே அகற்றப்பட்ட அதிசய சம்பவம் ஒன்று, இங்கு நிகழ்ந்திருக்கிறது!

தலைமைக் கழகம்: அறிக்கை—24/55

இந்திக் கமிஷன் பற்றி:

"ஹிந்தி கமிஷன்முன் சாட்சியம் கொடுக்க ஸ்ரீ அண்ணாதுரை தயார்," என்று தலைப்பிட்டு, "தி. மு. க. தலைவரான ஸ்ரீ ஸி. என். அண்ணாதுரை மட்டும் கமிஷன் முன்பு சாட்சியம் கொடுக்கத் தயாராயிருப்பதாக அறிவித்துள்ளார்," என்று, டாக்டர் சுப்பராயன் அவர்கள் நிருபர் பேட்டியில் கூறியதாக, 'சுதேசமித்திரன்' வெளியூர் ஆகஸ்டு 10, 1955 இதழில் செய்தி ஒன்று வெளிவந்துள்ளது. இந்தச் செய்திக்கு ஆதாரம் எதுவும் இல்லை என்று தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள் தலைமைக் கழகத்திற்குத் தெரியப்படுத்தியுள்ளார்கள்.

"இந்திய யூனியன் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டிருக்கும் இந்திக் கமிஷன் (அரசியல் மொழிக்கமிஷன்) 'இந்தி வேண்டுமா அல்லது வேண்டாமா' என்று கேட்கவில்லை; 'இந்தியை எப்படி எப்படியெல்லாம் புகுத்தலாம்' என்று ஆலோசனை கேட்கவே வருகிறபடியால், திராவிட முன்னேற்றக் கழகம், இந்திக் கமிஷனின் அழைப்பை ஏற்றுக்கொள்ளவோ, அதற்கு ஆலோசனை கூறவோ உடன்படாது என்பதை, இதன்மூலம் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

'அறிவகம்,' சென்னை 12-8 1955

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 12—8—'55 வெள்ளி

மயக்கிவிட முடியாது!

★

'காஷ்மீர் எல்லையிலிருந்து கன்னியாகுமரி முனை வரை—கல்கத்தாவிலிருந்து பம்பாய் வரை' என்று ஒரு நிலப்பரப்பின் நீள அகலங்களின் அளவுகளைக் காட்டியும், அந்த பரந்த நிலப் பரப்பில் அமையும் ஆட்சிக்கும், அந்த ஆட்சி யாருக்காக உள்ளதோ அந்த மக்களுக்கும் இடையே தொடர்பு—ஒற்றுமை இருக்க வேண்டும்; அந்த ஒற்றுமை தனிப் பண்பாட்டுச் சிறப்பு ககாண்ட ஒரு இனம் என்ற அடிப்படையில் அல்லது மொழியின் அடிப்படையில்தான் ஏற்பட முடியும் என்றும், இந்த இரண்டின் அடிப்படையில் அமையாத எந்த ஒரு ஆட்சியும்—அது எத்தனை நல்ல பண்புகளையும், அதேபோது வலிமையையும் கொண்டதாக இருப்பினும்—அந்த ஆட்சியின் கீழ் வாழ்கிற மக்களின் இன உணர்வும், நாட்டுப் பற்றும், அரசியல் தெளிவும்பெற்ருேரால் என்ருவது ஒரு நாள் வீழ்த்தப்படும் என்பதையும், மனித சமூக வளர்ச்சி பற்றிய வரலாறுகளை எழுதியுள்ள பேராசிரியர்கள் தெளிவாகக் கூறியிருக்கின்றனர்.

இந்தியத் துணைக்கண்டத்தில் இன்று நடைபெறுகிற ஆட்சிக்கும், அந்த ஆட்சியின் கீழ் வாழுகின்ற மக்களுக்கும் இடையே உள்ள தொடர்பு—ஒற்றுமை, இனத்தின் அடிப்படையிலோ, மொழியின் அடிப்படையிலோ ஏற்பட்டிருப்பதல்ல; அதாவது, இந்தியத் துணைக்கண்டத்தில் வாழும் கோடானுகோடி மக்களிடமும் 'எல்லோரும் ஒன்றே' என்றெண்ணும் ஒற்றுமை நிலவவில்லை.

இந்த உண்மையை பிரதமராயிருக்கும் பண்டித நேருவே ஒரு முறை குறிப்பிட்டிருக்கிருர் :—

"நம்மிடத்தில் எல்லோரும் ஒன்றென்று எண்ணுகிற உணர்வுபூர்வமான ஒற்றுமை இல்லை"—என்று!

"இருப்பதெல்லாம், அசைக்கவும், ஆட்டவும் முடியாத மத்திய அரசாங்கம்தான்" என்றும் பண்டிதர் விளக்கம் தந்தார்.

அது மட்டுமா?

"அந்த மத்திய ஆட்சியின் மூலம்தான், நாம், இந்தியாவின் 'அரசியல் ஒற்றுமை'யை பாதுகாத்து வருகிருேம்" என்றும் 'விளக்கம்' தந்தார்!

இந்திய 'வில், காஷ்மீரிலிருந்து கன்னியாகுமரி வரை, கல்கத்தாவிலிருந்து பம்பாய் வரை உள்ள பரந்த நிலப் பரப்பில் வாழும் மக்களிடையே, ஒற்றுமை இல்லை; எல்லோரும் ஒன்றெண்ணும் மனப்பான்மை இல்லை; ஆனல், அப்படி உணர்வுபூர்வமான ஒற்றுமையற்ற வேறு வேறு இன மக்கள் எல்லாம், 'ஆட்டவும்—அசைக்கவும்' முடியாத ஒரு மத்திய ஆட்சியின்கீழ் பிணைக்கப்பட்டிருக்கிருர்கள்.

இது உண்மை, பண்டித நேருவின் வாயுரைப்பட்ட உண்மை.

இந்த உண்மையை எடுத்துக் காட்டித்தான், நாம், 'திராவிட நாடு திராவிடருக்கே' என்ற உரிமைக் குரல் எழுப்பி வருகிருேம்.

"தென்னட்டில் — தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய நான்கு மொழி வழங்கும் திராவிடர்கள், வடநாட்டில் வாழும் இந்தோ-ஆரியர் என்றழைக்கப்படும் இனத்தவரிலிருந்து வேறுபட்டவர்கள்—பண்பால், பழம் பெரும் வரலாற்றுச் சிறப்பால், பழக்கத்தால், வழக்கத்தால்"—என்று, கடந்த கால சரிதத்தையும், நிகழ்கால நடைமுறைகளையும் சான்றுகளாகக் காட்டி கூறிவருகிருேம்.

திராவிட இன மக்கள், விடுதலையோடுகூடிய நிரந்தரமான நல்வாழ்வு பெற — 'திராவிட நாடு திராவிடருக்காக வேண்டும்,' என்று எடுத்துக் கூறி வருகிருர்கள்.

ஆனல், இந்தியாவில் ஒற்றுமை நிலவவில்லை என்ற உண்மையை மூடி மறைத்துவிட்டு, ஒற்றுமை நிலவுவதாகவும், அந்த ஒற்றுமையைச் சீர்குலைக்க நாம் முயற்சிப்பதாகவும் நம்மீது குற்றம் சுமத்தி, வெள்ளை ஏகாதிபத்தியவாதிகளால் நிர்ப்பந்தமாக துப்பாக்கி முனையில் மேற்கொள்ளப்பட்ட 'அரசியல் ஒற்றுமை'யை என்றென்றைக்கும் நிலை நிற்கச் செய்து, திராவிட இன மக்களை வடவருக்கு நிரந்தர அடிமைகளாக்கிவிட மனப்பால் குடிப்பவர்கள் பலர் இருக்கின்றனர்.

'அரசியல் ஒற்றுமை'யை நிலைநாட்ட மத்திய ஆட்சியைப் பயன்படுத்திக்கொண்டிருக்கின்றனர். அந்த மத்திய ஆட்சி, 'ஆட்டவும் அசைக்கவும்' முடியாதது என்று இறுமாப்புடன் பேசித் திரிகின்றனர்.

இதற்கிடையில், வலுத்து வரும் நமது உரிமை முழக்கம் கேட்டு, அவர்கள் திகிலடையாமலில்லை; 'ஒற்றுமை' கீதத்தை, 'இராகமாலிகை'யில் பலரும் இசைத்துக்கொண்டிருப்பதே, நமது முழக்கம் கேட்டு அவர்கள் அடைந்துள்ள கலக்கத்திற்குச் சாட்சியம் கூறும்.

இப்போது வடக்கையும்—தெற்கையும் 'அன்பால்' ஒற்றுமைப்படுத்த 'இந்தியப் பேரரசின் ஜனதிபதி'யான டாக்டர் இராசேந்திர பிரசாத் முயற்சிக்கப் போகிருராம்—தனிப்பட்ட முறையில்! எல்லோரும் இசைக்கும் 'ஒற்றுமை கீதத்'தைத்தான், அவர் வேறு இராகத்தில் இசைக்கப்போகிருர் போலும்!

அந்த இராகத்தின் இனிமையோ, அல்லது இசைப்பவரின் திறமையோ, விழிப்புற்ற திராவிடரை மயக்கிவிட முடியாது என்பது மட்டும் உறுதி!

பெல்லாரி பிரச்சினை

ஆந்திர, கன்னடியர் மாறுபட்ட கருத்துக்கள்

"ஜஸ்டிஸ் வாஞ்சு, ஜஸ்டிஸ் மிஸ்ரா போன்ற பிரபல நீதிபதிகளால் விசாரணை செய்யப்பட்டு இந்திய சர்க்காரால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிற — பெல்லாரி மைசூருடன் இணைவது என்ற முடிவை, மீண்டும் பிரச்சினையாக்க வேண்டாம்,"

என்று, மாநில புனரமைப்புக் குழுவைகோரி, பெல்லாரி மாவட்ட கர்நாடக செயற் குழு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

அதே நேரத்தில், பிரதாபகிரி வெங்கட சுப்பாராவ் தலைமையில் கூடிய பெல்லாரி மாவட்ட ஆந்திர சமிதி, ஆந்திர சர்க்காரின் கீழ் கன்னடியர்களின் நலன்கள் பாதுகாக்கப்படுமென்றும், எனவே, ஆந்திராவுடன் மீண்டும் பெல்லாரி இணைக்கப்படுவதற்காக மேற்கொள்ளப்படும் முயற்சிகளை கன்னடியர் தடுக்கவேண்டாம் என்றும் தீர்மானம் ஒன்று நிறைவேற்றியுள்ளது.

ரூ. 40 கோடி செலவில்!

வெள்ளப் பெருக்கை தடுப்பதற்குத் திட்டம்

கௌஹத்தி, ஆக. 11—

வெள்ளம், நில அரிப்பு இவற்ருல் ஏற்படும் பெரும் கொடுமைகளைத் தடுக்கும் நோக்குடன் அசாம் மாநில சர்க்கார், சுமார் 40 கோடி ரூபாயில் திட்டம் ஒன்று தீட்டியுள்ளனர்—இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்வதற்கென்று!

பிரம்மபுத்திரா நதியை ஒட்டி 260 மைல் நீளத்திற்கு ஒரு அணை கட்டவும், பிரம்மபுத்திராவின் கிளை நதிகளை ஒட்டி 570 மைல் நீளத்திற்கு ஒரு அணை கட்டவும் திட்டமிடப்பட்டிருக்கிறதாம்.

இந்த அணை கட்டும் வேலை, வரும் மார்ச்சு திங்களில் துவங்கப் படவிருக்கிறதாம்.

இத்துடன் ஒரு பல நோக்கு நதிப் பள்ளத்தாக்குத் திட்டம் ஒன்றும் சேர்க்கப்பட்டிருக்கிறதாம்.

தென்னட்டில் இரண்டு மீன் பயிற்சிச்சாலைகள்

நிறுவப்படும் என மத்திய மந்திரி அறிவிப்பு

பம்பாய், ஆக. 9—

"தங்களிடையே நிலவிவரும் பொருளாதாரச் சீர்குலைவைக் களைய, மீன் பிடிக்கும் துறையில் இயந்திர சாதனங்கள் புகுத்தப்பட வேண்டுமென்ற மீனவர்களின் கோரிக்கை வர வர அதிகமாகிக் கொண்டே வருகிறது," என்று மத்திய விவசாய அமைச்சர் பஞ்சாப்ராவ் தேஷ்முக், சத்பதியிலுள்ள மீன் இலாகாவைச் சேர்ந்த ஒரு மத்திய பயிற்சி நிலையத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் கூறியிருக்கிருர்.

"அடுத்த ஆண்டில்—அதாவது 1956-ம் ஆண்டில், சென்னை, திரு-கொச்சி மாநிலத்திலுள்ள மீனவர்களின் நன்மையைக் கருதி, கொச்சியிலும், தூத்துக்குடியிலும் இரண்டு மீன்துறை மத்திய பயிற்சி நிலயங்கள் நிறுவப்படும்" என்றும் அவர் தெரிவித்திருக்கிருர்.

மேலும் அவர் பேசுகையில், சுமார் 2,900 மைல்களுக்கு அதிகமாகக் கடற்கரையோரப் பகுதிகளைக்கொண்ட இந்திய நாட்டில் மீன்துறை சம்பந்தமான வேலைகள் நடைபெற தேவையான வசதிகள் இருக்கின்றன என்றும் எனவே, மீனவர்கள் தாங்கள்பிடிக்கும் மீன்களின் தொகை[illegible]யும் அதற்கான நேரத்தையும் மேலும் அதிகரிக்கச்செய்து அவர்களுக்கு நன்மை பயக்கும் முறையில் அவர்கள் மீன் பிடிப்பதற்காக கையாளும் முறைகளை அபிவிருத்தி செய்யவேண்டியது அவசியமாகிறது என்றும் குறிப்பிட்டிருக்கிருர்.

கோவா நெருக்கடி

பண்டிதர் ஆலோசனை

இந்திய சர்க்காரின் வெளிவிவகார அலுவலகத்தின் ஆலோசனைக் குழுவைச் சேர்ந்த உறுப்பினர்களான சில பாராளுமன்ற உறுப்பினர்களுடன், பிரதமர் நேரு பண்டிதர் கோவா நிலைகுறித்து ஆலோசனை நடத்தியுள்ளார்.

அடுத்த வார ஆரம்பத்தில் மக்கள் சபை உறுப்பினர்கள், பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள், மற்றும் பலரும் ஆயிரக்கணக்கில் கோவாவிற்குள் நுழைய இருக்கின்றனர். அவர்கள் மீது போர்ச்சுகீசிய சர்க்கார் என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதுபற்றி எதுவும் தெரியவில்லையாம்.

எனினும், அண்மையில் இரண்டு கோவா விடுதலை இயக்கத்தொண்டர்கள் சுட்டுக்கொல்லப்பட்டது போன்ற சம்பவங்கள் ஏதாவது நிகழுமானல், டில்லி 'தக்க' நடவடிக்கைகள் மேற்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுவதாகவும், அவ்வாறு நடைபெறுவதானல், கோவாவில் போர்ச்சுகீசியரின் ஆட்சி நீடித்து நடைபெறுமற்போகச் செய்வதற்கான நிலைகள் உருவாகுமென்றும் அங்குள்ளோர் கருதுவதாகவும் தெரிகிறது.

விடுதலை இயக்கத்தின் தேசியத் தன்மையையொட்டி, இந்திய சர்க்கார் கோவா பிரச்சினையைச் சுமூகமாகத் தீர்த்துவைக்க தீவிர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது அதனுடைய கடமையாகிறது என்றும் கருதப்படுகிறதாம்.

அடையாள வேலை நிறுத்தம் : 5,80,000 பேர் கலந்துகொள்வர்?

கோவா விடுதலை இயக்கத்திற்குத் தங்கள் ஆதரவினைத் தெரிவித்துக்கொள்ளும் வகையில், இத்திங்கள் 12-ந் தேதியன்று விசால பம்பாயில், 5 லட்சம் தொழிலாளர்களும், 80,000 மாணவர்களும் ஒருநாள் அடையாள வேலை நிறுத்தம் செய்வர் என்று தெரிகிறது.

இந்த வேலை நிறுத்தத்தில், இ. தே. தொ. ச. காங்கிரஸ் நிறுவனத்தைத் தவிர்த்த மற்றெல்லா தொழில் நிறுவனங்களும் கலந்துகொள்ள இருக்கின்றனவாம்.

கோவா பிரச்சினை, தொழிற் சங்கப் பிரச்சினை அல்ல என்பதே, மேற்படி வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்ளாததற்கு அ. இ. தே. தொ. ச. காங்கிரஸ் கூறும் காரணமாம்!

அனுமதி மறுப்பு!

கோவாவிற்குச் செல்லக்கூடாது என்று, 9 இந்திய செய்தி நிருபர்களுக்கு அனுமதி தர போர்ச்சுகீசிய அதிகாரிகள் மறுத்துவிட்டனராம். ஆனல், பிரிட்டன், அமெரிக்காவைச் சேர்ந்த 9 நிருபர்களுக்கு மட்டும் கோவாவில் நுழைய அனுமதி வழங்கப்பட்டிருக்கிறதாம்.

போர்ச்சுகீசிய இராணுவ நீதிமன்ற விசாரணை

கோவா விடுதலை இயக்கத்தில், இந்திய கிளர்ச்சிக்காரர்களான என். ஜி. கோரேயும், மதுலிமாயியும், போர்ச்சுகீசிய இராணுவ நீதி மன்றத்தினல் விசாரிக்கப்பட இருக்கின்றனராம்.

மேற்படி தகவலை, மக்கள் சபையில் பிரதமர் நேரு பண்டிதர் தந்துள்ளார்.

போர்ச்சுகீசியச் சட்டப்படி, கோவாவிற்குள் உள்ள எந்த நீதி மன்றத்திலும், அல்லது இராணுவ நீதி மன்றத்திலும் வாதாட இந்திய வக்கீல்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும், ஆயினும் போர்ச்சுகீசிய சர்க்காருக்கு ஆட்சேபணை இல்லாத முறையில், ஒரு இந்திய வக்கீல் கோவா சென்று, இராணுவ நீதிமன்றத்தில் இந்தியத் தொண்டர்கள் சார்பில் வாதாடும் வழக்கறிஞருக்கு உதவியாக இருப்பார் என்றும், இதன்படி, புனவில் உள்ள 'கோவா விடுதலை உதவி நிறுவனம்' ஒரு வழக்கறிஞரைத் தேர்ந்தெடுத்து அவரை கோவாவிற்கு அனுப்பும் என்றும் தெரிவித்திருக்கிருர்.

6 சர்க்கரை ஆலைகள்

தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் நிறுவப்படும்?

'மக்களின் தேவையையும், கரும்புச் சாகுபடி செய்வதற்கான நிலத்தின் தன்மையையும் பொறுத்தவரையில், தஞ்சை, திருச்சி ஆகிய இரு மாவட்டங்களிலும் 6 சர்க்கரை ஆலைகள் நிறுவப்படலாம்,"

என்று, அமைச்சர் பக்தவத்சலம், சட்டசபையில்தெரிவித்திருக்கிருர்.

மாநில சர்க்காரும், மத்திய சர்க்காரும், தனிப்பட்ட நிறுவன முறையைவிட, கூட்டுறவு முறையில் ஆலைகள் ஏற்படுவதை மிக முக்கியமானதாகக் கருதி வரவேற்கின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிருர்.

மேற்படி மாவட்டங்களில் சர்க்கரை ஆலைகள் துவங்குவதற்கான லைசென்சு கோரி இரு தனிப்பட்ட நபர்களிடமிருந்து சர்க்காருக்கு மனு வந்துள்ளதென்றும், ஆனல் இன்னும் சர்க்கார் லைசென்ஸ் வழங்கவில்லை என்றும், தற்சமயத்திற்கு, அம்மாவட்டங்களில் உள்ள ஒரே ஒரு தொழிற்சாலைக்கு மட்டுமே அந்த லைசென்சு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது என்றும் குறிப்பிட்டிருக்கிருர்.

தஞ்சைச் சட்ட யோசனைப்படி கூட்டுறவு முறையில் சர்க்கரை ஆலைகள் நிறுவ விவசாயிகள் திட்டமிட்டு முன்வருவார்களானல் சர்க்கார் அதைக் கவனித்து ஆவன செய்யும் என்றும் தெரிவித்திருக்கிருர்.

கம்யூனிஸ்டு அபேட்சகரிடம்

முன்னள் மந்திரி தோல்வி

பெப்சு மாநிலத்தின் முன்னள் அகதி புனரமைப்பு இலாகா மந்திரியான சம்பூரண் சிங் என்ற காங்கிரஸ்காரரை, தனௌலா தொகுதியில் நடைபெற்ற உபதேர்தல் ஒன்றில், பாபா ஹர்தித் சிங் பட்டல் என்ற கம்யூனிஸ்டு தோற்கடித்திருக்கிருர்.

பாபா பட்டல், முன்பு அதே தொகுதியில் வெற்றி பெற்றவர்; ஆனல், ஆட்சேபணை மனு ஒன்றினல், அவரது தேர்தல் செல்லாதென தீர்ப்பளிக்கப்பட்டிருந்தது. இப்போதும் அவரே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிருர்.

சேர்த்துக்கொள்ள வேண்டுமே!

சென்னை, ஆக. 10—

பராபோல் மின்சார உற்பத்தித் திட்டம், மேற்குக் கடற்கரையில் உள்ள நான்கு சிறிய துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதற்கான திட்டம் முதலியனவற்றை இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று முன்னள் சென்னை மந்திரியான கே. மாதவமேனன் எம். பி., பத்திரிகை அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டிருக்கிருர்.

தென்னட்டிலும் ஒன்று!

அகில இந்திய கைத்தொழில் போர்டு செய்த சிபாரிசுப்படி, இந்திய சர்க்கார், பொருள்கள் இன்னின்ன வகையில் — மாதிரியில் உற்பத்தியாக வேண்டும் என்று நிர்ணயிக்கும் நான்கு வட்டார 'டிசைன்' கேந்திரங்களை அமைக்க முடிவு செய்திருக்கின்றனராம்.

அவை டெல்லி, பம்பாய், பெங்களூர், கல்கத்தா ஆகிய இடங்களில் அமையுமாம்.

கராச்சி, ஆக. 11—

பாகிஸ்தானுக்கு விரோதமாகச் செய்யப்படுகிறது என்று கூறப்பட்ட பிரச்சாரத்தை ஆப்கன் சர்க்கார் நிறுத்திவிட்டனராம்.

இதனை ஒட்டி, பாகிஸ்தானுக்கும்—ஆப்கனிஸ்தானுக்கும் இடையே கொடி சம்பந்தமாக எழுந்த தகராறு தீர்ந்துவிட்டதாகவே கருத வேண்டும் என்று, பாகிஸ்தான் அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிருர்.

'குடி தண்ணீர் பஞ்சத்தைப் போக்க சர்க்கார் எடுத்த நடவடிக்கைகள் என்ன?'

மேல் (சட்ட) சபையில் வி. வி. இராமசாமி கேள்வி

" குற்றாலத்தின் அருமையான நீர்வீழ்ச்சியில் குளித்துவிட்டு, அங்கு வீசுகின்ற குளிர்ச்சியான தென்றலை அனுபவித்துத் திரும்பிய கவர்னர், 'தென் மேற்குப் பருவ நிலை நன்றாக ஆரம்பித்து இருக்கிறது' என்று கூறியிருக்கிறார் ; அதே சமயத்தில், ' ஏரிகளில் போதுமான தண்ணீர் இன்னும் பெருகவில்லை ' என்றும் ஒப்புக்கொண்டிருக்கிறார். இராமநாதபுரம் மாவட்டத்தில் போதுமான மழை இல்லை ; குடி தண்ணீருக்கு மக்கள் தொல்லைப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் ;

" குடி தண்ணீரைப் பொறுத்தமட்டில், முக்கிய நகரங்களிலே அதைப்பற்றி விசேட கவனம் செலுத்தப் போவதாகக் கவர்னர் கூறியிருக்கிறார் ; ஆனால், அதற்காகப் போதுமான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படவில்லை ; அதைத் தனி இலாகாவாகப் பிரித்தபோதிலும்கூட, ஆராய்ந்து திட்டம் வகுப்பதற்கு ஒரு இலாகாவும், நிறைவேற்றுவதற்கு ஒரு தனி இலாகாவும் இருப்பதால் திட்டங்கள் சரிவர விரைவில் நிறைவேற்றப்படவில்லை; ஆகவே, துரிதமாக இத்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு சர்க்கார் ஆவன செய்வார்களென நினைக்கிறேன்,"

—என்று, சென்னை மேல் (சட்ட) சபையில் கவர்னர் உரையின்மீது நடைபெற்ற விவாதத்தின்போது பேசுகையில், தோழர் வி. வி. இராமசாமி அவர்கள் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசியதாவது :—

" நம் நாட்டின் முக்கியப் பிரச்னை, நிலப் பிரச்சினையாகும் ; இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக, இதை மூன்று கட்டமாக அரசினர் பிரித்திருக்கிறார்கள். நிலத்திலே பாடுபட்டு உழுது வேலை செய்துகொண்டிருந்தவர்களை திடீரென்று விலக்குவது அநியாயமாகும் ; அவ்வாறு விலக்குவதைத் தடுக்கச் சட்டம் கொண்டுவருவது அவசியம்தான் ; நிலங்களின் குத்தகை விகிதத்தை மாநிலம் பூராவும் ஒரே மாதிரியாக நிர்ணயிக்க முடிவு செய்திருப்பது வரவேற்கத் தக்கதுதான் ; ஆனால், நிலத்தின் வளத்தைப் பொருத்தும், பரம்பரையாக நிலம் வைத்துக்கொண்டிருக்கும் மக்களின் பொருளாதார நிலைமையைப் பொருத்தும் இதை நிர்ணயம் செய்வார்கள்என்று எதிர்பார்க்கிறேன் ; ' ஒருவர் எவ்வளவு நிலம் வைத்துக்கொள்ளலாம்,' என்ற உச்ச அளவை நிர்ணயிக்கப் போவதை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன்.

" சில கிராமங்களிலே, சிலரிடம், ஏராளமாக நிலம் குவிந்துகிடக்கிறது ; இந்த நிலைமையை ஆராய்ந்தால்—ஏழைக் குடியானவர்கள் தாங்கள் பூர்வீகமாக வைத்திருந்து உழுது பயிரிட்ட நிலங்களை, நாளாவட்டத்தில் கடன்பட்டு,வட்டியைக் கூட திருப்பித் தரமுடியாத நிலைமையில், பெரிய நிலச்சுவான்தார்களுக்கு—நிர்ப்பந்தம் தாங்க முடியாமல் விற்றுவிட்டார்கள் என்பது தெளிவுபடும் ; ஆகவே, நிலத்தை உழுபவர்களுக்குப் பயன்படும் நல்ல முறையிலே இந்த நிலச் சீர்திருத்தம் அமைய வேண்டும் ; அன்றியும், ஏழைக் குடியானவர்களுக்குத் தேவையான பணம், • விரைவில் கிடைக்குமாறு சட்டமியற்ற வேண்டும்.

மக்களின் நம்பிக்கையை 'மண்'ணாக்காதீர் !

"கைத்தொழில்களைப் பொறுத்த மட்டில், இம்மாநில மக்கள், நெய்வேலிச் சுரங்கத் திட்டத்தில் அளவுமிக்க நம்பிக்கை வைத்துள்ளனர் ; சேலம் மாவட்டத்தில் அலுமினியம் உற்பத்தி செய்ய பெரும் இயந்திரங்களை உருவாக்க உருக்குப் பட்டரை அமைப்பது போன்ற தொழிற்சாலைகள் இங்கு ஏற்படுமென்றும், அதன் மூலம் வேலையில்லாத் திண்டாட்டம் ஒழியுமென்றும் மக்கள் எண்ணிக் கொண்டுள்ளனர்.

" ஆனால் எக்காரணம் பற்றியோ மத்திய சர்க்கார் தென்னாட்டுப் பிரச்சினையில் அசிரத்தையுடன் உள்ளனர். தென்னாட்டு மக்களின் இந்த நம்பிக்கை பாழாகுமானால், அவர்கள் மனம் புண்படும்.

" தென்னாட்டில் மூலப்பொருள்கள் இல்லை—முதலீடு இல்லை—என்று ஒரு மத்திய சர்க்கார் அமைச்சர் கூறுவதனாலேயே, தென்னகம் இந்த நிலையிலேயே இருக்க வேண்டுமா? 'தென்னகத்தைப் புறக்கணிக்கக் கூடாது,' என்று மத்திய அரசாங்கத்தை வலியுறுத்துவது இந்த சர்க்காரின் கடமை. அப்பொழுதுதான் தென்னாட்டு மக்களுக்கு நம்பிக்கை பிறக்கும். 'தென்னாட்டு வளத்தில் அக்கரைகொண்டால்தான், தென்னகம் தன்னுடைய அவநம்பிக்கையைக் கைவிடும்,' என்பதை இம்மாநில சர்க்கார் மத்திய சர்க்காருக்கு வற்புறுத்திக் கூற வேண்டும்.

நன்மைகள் கிடைக்க நல்லதோர் மார்க்கம்

" பம்பையாறு, அப்பர் பெரியாறு நதிகளின்தண்ணீரைவீணாகாமல், இம்மாநிலத்திற்குத் திருப்பிக் கொண்டுவந்தால் நீர்ப்பாசனத்திற்கு நல்ல வசதி கிடைக்கும், இதுபற்றி முதலமைச்சர் காமராசர், திருவாங்கூர் முதலமைச்சருடன் கலந்து பேசி ஒரு சுமுகமான முடிவுக்கு வந்தால் இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களுக்கு நீர்ப்பாசன வசதி பெருகும். இராமநாதபுர மாவட்டத்தில்தான் எந்தவிதமான பெரிய நீர்ப்பாசன வசதியுமில்லை ; மற்ற எல்லா மாவட்டங்களிலும் இருக்கத்தான் செய்கின்றது ; இதை முக்கியமாக சர்க்கார் கவனிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

தமிழ் ஆட்சி மொழியாக சட்டமியற்றுக !

" நமது நாட்டு மொழிக்குப் பங்கம் ஏற்படாது—ஏற்படவும் கூடாது என்ற நம்பிக்கை மக்களிடையே பிறக்க வேண்டுமானால், ஆட்சியினர் தமிழை உடனடியாக அரசியல் நிர்வாக மொழியாக்குவதற்கு தீர்மானம் செய்துவிட வேண்டும்; அதற்கான சட்டத்தையும் இயற்ற வேண்டும். மலையாளம், தென் கன்னடம் இவைகளையும் சேர்த்துக்கொண்டு மூன்று மொழிகளையும் அரசாங்க மொழியாக்க வேண்டும். நாளாவட்டத்திலே மொழிவாரி மாகாணம் பிரிக்கப்படும்போது மலையாளமும், கன்னடமும் பிரிந்துபோய்விடும்; பிறகு தமிழ் நாட்டிற்குத் தமிழ் மொழியே ஆட்சி மொழியாக விளங்கும்.

" தமிழ்ச் சொற்களைப்பொறுக்கி எடுக்கும்போது வடமொழிக் கலப்பில்லாமல் சுத்த தமிழ் சொற்களாகப் பொறுக்கி எடுக்க வேண்டும் ; அதற்காக, தகுதி மிக்கவர்களை நிபுணர் குழுவில் நியமித்து, அவர்களைக் கலந்து ஆலோசித்து தமிழ்ச் சொற்களைப் பொறுக்கி எடுக்கவேண்டும் ; ' தர்மாமீட்டருக்கு' பதில் ' உஷ்ணமானி ' என்று சொல்லுவதுபோல், மக்களுக்குப் புரியாத வார்த்தைகள் இருக்கக்கூடாது. அதே போல் நிர்வாகத்திற்கு வேண்டிய தமிழ்ச சொற்களைக் கண்டுபிடிக்கச் செய்ய குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும் ; தமிழ் மொழி ஆட்சி மொழியாக்கப்பட வேண்டும்.

இந்தியைத் திணிக்க இடங் கொடாதீர் !

" எந்தவிதத்திலும் இந்தியை இம்மாநிலத்தில் கட்டாயமாகத் திணிக்கக்கூடாது ; இந்தியைப் புகுத்துவதன் மூலம் தமிழ் மொழிக்கு ஏதாவது பாதகம் ஏற்பட்டால், மக்கள் அவர்களை மன்னிக்கவேமாட்டார்கள் என்பதை மனதில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று சர்க்காரை எச்சரிக்கிறேன். இதற்காகத்தான்; தமிழே ஆட்சிமொழியாக வேண்டுமென்று சொல்லுகிறேன்.

கிளர்ந்துள்ள ஆர்வத்தை குன்றிவிடச் செய்யாதீர் !

" 150 ஆண்டுகளாக ஆங்கிலம் ஆட்சி மொழியாக இருந்துவந்ததால், ஆங்கில நாகரீகத்தின் மோகமும் நம்மைப் பற்றிக்கொண்டு விட்டது. 10 ஆண்டுகளாகத்தான் மக்களுக்கு தொழிலின்பால் ஓர் ஆர்வம் எழுந்திருக்கிறது. இந்தி தேசீய மொழி என்ற காரணத்திற்காக அதற்கு இடம் கொடுத்தால், இப்போதுதான் விழித்தெழுந்த தமிழர்கள், பண்டையப் பண்பாட்டினை இழந்து, பழையபடி சேவல நிலைமை அடைவதற்கு இடம் கொடுத்தவர்களாக ஆகிவிடுவார்கள் என்று எச்சரிக்கிறேன்."

'நயவஞ்சகக் கூட்டம் நாட்டிலிருக்கும்வரையில்..'

'நாடு நலமடைய நாலாயிரம் ஆண்டுகளாவதில் ஆச்சரியமில்லை

★

திருச்சி மாவட்ட ' அரிஜனக் கமிட்டி ' கூட்டம், ' சர்க்கார் தீண்டாமைக் குற்ற விளக்க சம்பந்தமான சுவரொட்டிகள் வெளியிட்டுள்ளதை திரும்பப் பெறவேண்டு' மென்று கோரியுள்ளதாம்.

' தீண்டாதே — தொடாதே — தூர நில்,' என்று மனிதருக்குள் தீண்டாமை—தாழ்வு கற்பிப்பவருக்குத் தண்டனை, அபராதம், சிறைவாசம்—என்று சர்க்கார் சட்டம் செய்துள்ளனர் ; அது பொது மக்கள், சாதி இந்துக்கள் யாவருக்கும்; விளக்கமுறத் தெரிவிக்க வேண்டுமென்ற ஒரு பட விளம்பரம் ; இதனால், முக்கியமாக அரிஜனங்களுக்கே பெரிதும் நன்மை ; கிணற்றில், குளத்தில், தெருவில், வீட்டில், பொது இடத்தில் வாழாதே ; சேராதே—என்று சொல்லும் சாதி இந்துக்கள் மனமாற்றமடைய இவ்விளம்பரம் நல்ல எச்சரிக்கையும், பிரச்சாரமுமாகும்; இதை ஒட்ட வேண்டாமென்று—யாருக்கு நன்மையோ அவர்களே சொல்கிறார்களென்றால், தீண்டாமை எப்படி ஒழியப் போகிறது? "செய்யப் டும் நன்மையைக் கூட வேண்டாமென்று சொல்லும் அளவுக்கு அவர்கள் மனதைக் கலைக்க ஒரு நய வஞ்சகக் கூட்டம் நாட்டில் இருக்கிறதென்றால்; இந்நாடு நல்லநதி அடைய நாலாயிரம் ஆண்டுகள் கூட பிடிக்கும் என்று சொன்னால் அதில் ஆச்சரியமில்லையே !"—என்கின்றனர் நம் மக்கள் !

—' ஞா. இ. '

குன்னூரில் முத்தமிழ் விழா!

பயன் மிகுந்த நிகழ்ச்சிகள்

குன்னூர் நகர திராவிட முன்னேற்றக் கழக நிதிக்காக 7-8-55 ஞாயிறன்று முத்தமிழ் விழா ஒன்று சிறப்புற நடைபெற்றது.

விழாவில் கலந்துகொள்வதற்காக தி. மு. கழக துணைப் பொதுச் செயலாளர் தோழர் என். வி. நடராசன், மற்றும் தோழர்கள் டி. கே. சீனிவாசன், முகவை ஆர்.எஸ் பாண்டியன், நாகூர் அனீபா ஆகியோர் 7—8—55 அன்று பகல் 12 மணிக்கு, குன்னூர் புகை வண்டி நிலயம் வந்தடைந்ததும், கழகத் தோழர்கள் உற்சாகமானதோர் வரவேற்பளித்தனர். எண்ணற்ற கழகத் தோழர்களும் ஆயிரக்கணக்கான பொதுமக்களும் பின்தொடர, நகரின் முக்கிய வழியாக ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது. கழகக் கொடிகளாலும், தோரணங்களாலும், வரவேற்பு வளைவுகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்த வீதிகள் வழியே சென்ற ஊர்வலம், முத்தமிழ் விழா நடைபெறும் ' கணேஷ் டாக்கீ'ஸை அடைந்தது.

ஊர்வலத்தில் கழகத் தோழர்கள் எழுப்பிய இலட்சிய ஒலி முழக்கம், சுற்றிலுமுள்ள மலைகளில் மோதி விண்ணதிர எதிரொலித்தது.

பின்னர் பிற்பகல் 3 மணிக்கு தோழர் இசை முரசு நாகூர் அனீபா குழுவினர் இன்னிசை வழங்கினர்.

கட்டணம் செலுத்தி விழாவிற்கு வந்திருந்த ஆயிரக்கணக்கானோர் தியேட்டரில் நிரம்பி வழிந்தனர்.

அடுத்து, மாலை 6 மணி அளவில் இயல் நிகழ்ச்சியாக சொற்பொழிவுகள் நடைபெற்றன.

அந்தச் சிறப்புக் கூட்டத்திற்குத் தோழர் ச. முருகேசன் தலைமை வகித்தார்.

அடுத்து, தோழர் ஒளியழகன் அவர்கள், குன்னூரில் முத்தமிழ் விழா நடத்துவதின் நோக்கம் குறித்து உரை நிகழ்த்தினர்.

குந்தைப் பகுதி தி. மு. கழகத் தோழரான பேப்பன் என்பவர், மலை வாழ் மக்களில் ஒரு பிரிவினரது மொழியான வடுக மொழியில் சிறிது நேரம் கழக லட்சியம்—கொள்கை குறித்து விளக்கம் தந்தார்.

அடுத்து, தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியன், தி. மு கழகத்தின் சமுதாயக் கொள்கை குறித்து விளக்கிப் பேசினர்.

பின்னர், தோழர் டி. கே. சீனிவாசன் அவர்கள், கழக லட்சியம் குறித்து, அரியதோர் சொற்பொழிவு நிகழ்த்தினர்.

இறுதியாக, தோழர் என். வி நடராசன் அவர்கள், கழகத்தின் லட்சியத்தையும், கொள்கையையும் விளக்கி நீண்டதோர் சிறப்புரை நிகழ்த்தினர்.

இறுதியாக, தலைவர் முடிவுரையுடன் இயல் நிகழ்ச்சி முடிவுற்றது.

பின்னர், இரவு 9–30 மணி அளவில் மீண்டும் இசை முரசு நாகூர் அனீபா குழுவினர் சிறிது நேரம் இசை விருந்தளித்தனர்.

நாடக நிகழ்ச்சியாக, குன்னூர் பகுத்தறிவு நாடக மன்றத்தினர், தோழர் மு. கருணாநிதி எழுதிய ' பரப்பிரம்மம் ' எனும் நாடகத்தை நடித்துக்காட்டினர்.

நாடகத்தில் பங்கு பெற்றிருந்த அத்தனை கழகத் தோழர்களும், தத்தமக்குத் தரப்பட்டிருந்த பாத்திரங்களை உணர்ந்து திறம்பட நடித்து, அனைவரின் பாராட்டுதலையும் பெற்றனர்.

நாடகத்திற்குத் தலைமை தாங்கிய தோழர் முகவை ஆர். எஸ் பாண்டியன், ' பரப்பிரம்மம் ' நாடகத் தோற்றம் குறித்தும், தோழர்களின் நாடகப் பணி குறித்தும் பேசினர்.

பின்னர், தோழர் எஸ் எஸ். ஆகன் நன்றி நவில விழா இனிது முடிவுற்றது.

தேயிலைத் தோட்டத்தில்

குன்னூரை அடுத்துள்ள ' ராப் ராய் எஸ்டேட் ' தி. மு. கழகச் செயலாளர் தங்கவேலு அவர்கள் இல்லத்தில் கூடிய தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களிடை 8—8—55 அன்று மாலை 6 மணி அளவில், தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியன், கழக நடைமுறைகள் குறித்து விளக்கியதுடன், மலைப் பகுதியில் கழக வளர்ச்சிக்காகப் பெரு முயற்சியில் ஈடுபட்டிருக்கும் தோழர்களைப் பாராட்டிப் பேசினர்.

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலை முதலியன குறித்து அங்குள்ள தோழர்கள் விளக்கிக் கூறினர்.

★

வெடி மருந்து தொழிலாளரிடையே

குன்னூரை அடுத்த அருவங்காடு வெடி மருந்துத் தொழிற்சாலையைச் சேர்ந்த சுமார் 1,500 தொழிலாளர்கள் 9—8—55 அன்று, ஆள் குறைப்பை எதிர்த்தும், அருவங்காடு தொழிற்சாலையை வட நாட்டிற்கு மாற்றிவிட எத்தனிக்கும் இந்திய சர்க்கார் போக்கைக் கண்டித்தும், ஊர்வலமாக வந்து குன்னூர் ' ஜவகர் சதுக்கத்'தில் பிற்பகல் 3–30 மணிக்குக் கூடினர்.

கூட்டத்திற்குத் தோழர் கில்பர்ட் தலைமை தாங்கினர். நீலமலை தோட்டத் தொழிற்சங்கத் தலைவர் தோழர் பெருமாள், தோட்டக்காடு தொழிலாளர் சங்கத் தலைவர் தோழர் இராசகோபலம், வெடி மருந்துத் தொழிலாளர் சங்கச் செயலாளர் தோழர் டி. சிதம்பரம், தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியன் ஆகியோர் பேசினர்.

சென்னை மாநிலத்தில் ஏற்கனவே இருந்த வெடி மருந்து, ஆயுத தளவாட உற்பத்தித் தொழிற்சாலைகள் மூன்று வடநாட்டிற்கு மாற்றப்பட்டுவிட்டன ; எஞ்சியுள்ளது அருவங்காடு வெடி மருந்துத் தொழிற்சாலை ஒன்றுதான்; அந்தத் தொழிற்சாலையையும், சிறிது சிறிதாக வட நாட்டிற்கு மாற்ற முயற்சிக்கும் இந்திய அரசாங்கத்தின் போக்கு, கூட்டத்தில் வன்மையாகக் கண்டிக்கப்பட்டது.

குடும்ப கட்டுப்பாடு இயக்க எதிரொலி ?

ஆண்டொன்றுக்கு 50 இலட்சம் குறைப்பிரசவங்கள்?

பூனா, ஆக. 9—

ஜப்பானில், ஆண்டொன்றுக்கு சுமார் 10 இலட்சம் குறைப் பிரசவங்கள் நடைபெறுகின்றனவாம் !

இவ்வாறு நடைபெறுகின்ற குறைப்பிரசவங்கள் அனைத்தும் குடும்பக் கட்டுப்பாடு இயக்கத்தின் ஒரு பகுதியாகுமாம் ; இது, சட்டபூர்வமாகவே நடைபெற்று வருகிறதாம் !

எனினும், ஜப்பானில் மக்கள் தொகைப் பெருக்கப் பிரச்சினை குறைந்தபாடில்லை என்றும், தற்போது இதற்கான வேறு வழிமுறைகள் பற்றி ஆராயப்பட்டு வருவதாகவும் தெரிகிறது.

இராணுவச் செலவுகள் குறைக்கப்படும் ?

இந்திய சர்க்காரின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நிதித் தேவையைப் பொறுத்து, பாதுகாப்பு இலாகா வரவு—செலவில் எவ்வளவு தொகையைக் குறைக்க முடியும் என்பது குறித்து இங்கு கூடிய பார்ராளுமன்ற காங்கிரஸ் கட்சியின் பாதுகாப்பு இலாகா நிரந்தரக் குழு ஆலோசித்ததாகத் தெரிகிறது.

மாணவர்களுக்கு நெடுஞ்செழியன் வேண்டுகோள்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

மட்டும் பொறுத்தே அவ்விலக்கியம் இயற்றப்பட்டதாகவும் இருப்பதைத்தான் நாம் கண்டு வருகிறோம். இவ்வாறு, ஒரு குறிப்பிட்ட காலத்தையோ, அல்லது ஒரு குறிப்பிட்ட இடத்தையோ, அல்லது ஒரு குறிப்பிட்ட ஆளையோ மட்டுமே அவ்விலக்கியம் சார்ந்திருப்பதில்லையே, நாம் அதை வேண்டாம் என்று சொல்லிவிடவில்லை.

"அந்த இலக்கியங்களுடன்—அவை காட்டும் வாழ்நெறியுடன், திருவள்ளுவர் நமக்கு அளித்த 'வாழ் நெறி'யை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, பல வேறுபாடுகளை நாம் காண்கிறோம். ஒவ்வொரு இலக்கியமும் ஒவ்வொரு குறிப்பிட்ட வாழ்நெறியை மட்டும் நமக்கு எடுத்துச் சொல்லும்போது, திருவள்ளுவரின் வாழ்நெறி ஒன்றுமட்டுமே தான், நமக்கு, ஒரே காலத்தில், உலகிலுள்ள மனிதவர்க்கம் அனைத்தும் கடைப்பிடித்து ஒழுகக்கூடிய வாழ்நெறியை நமக்குப் போதிக்கிறது.

"கற்க கசடறக் கற்பவை
கற்றபின்,
நிற்க அதற்குத் தக"

என்று வள்ளுவர் கூறியிருக்கிறார்.

"'ஒருவன் கற்க வேண்டியதைக் குற்றமறக் கற்க வேண்டும்; அவ்வாறு குற்றமறக் கற்றபின், தான் கற்ற கல்விக்குத்தகுதியாக நடக்க வேண்டும்'—என்று வள்ளுவர் கூறியிருக்கிறார். 'இது யாருக்குப் பொருந்தாது?—எந்தக்காலத்திற்குப் பொருந்தாது?' — என்பதைத்தான் நாம் கேட்கிறோம்.

"தான் கற்பவற்றை முறையாகக் கற்பதுடன், கற்றபின்னர் அதன்படி நடந்துகொள்ளவேண்டுமென்றும் கூறுவது, உலகிலுள்ள எல்லா மக்களுக்கும்—எம்மதத்தவருக்கும்—எக்காலத்திற்கும் பொருந்தக்கூடிய ஒன்றேயாகும்.

"நாம் ஒரு சிறுவனை அழைக்கிறோம் என்று வைத்துக்கொண்டால், அவனை அழைக்கும் முறையிலே பலவிதங்கள் இருக்கின்றன—'கண்ணே வா', 'வாடா கண்ணே' என்றெல்லாம் அழைக்கும்போது, அச்சிறுவன் மீதுள்ள பரிவு எத்தன்மைத்து என்பதைக் காட்டிலும், 'இனிமையான சொற்களை உபயோகிக்கிறோம்' என்பதுதான் மிக முக்கியமானது; ஆனால், 'வாடா கண்ணே' என்று அழைப்பதை விடுத்து, 'வாடா கழுதை' என்று அழைத்தால் நம்மிடையே இன்சொல்லின் அருமை எங்கிருந்து கிடைக்கும்?

"அவ்வாறு, பிறருடன் நாம் பேசுகையில், இனிய சொற்களையே உபயோகிக்க வேண்டும்; அதனை விடுத்து, இனிமை பயக்காத வார்த்தைகளை நீக்கவேண்டும் என்றும், அவ்வாறு இனிய சொற்கள் அருகிலேயே இருக்க, அதை விடுத்து இனிமை பயக்காத சொற்களைப் பயன்படுத்துவதானது, பக்கத்திலே இருக்கின்ற சுவைமிக்கக் கனிகளை விடுத்து, அதற்கப்பால் இருக்கும் காய்களை சாப்பிட விரும்புவதை ஒத்ததாகும் என்றும் கூறுகிறார்; அந்த உண்மையைத்தான்,

"இனிய உளவாக இன்னாத
கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று"

எனும் ஈரடிகளால் விளக்குகிறார்; இந்த உண்மையும், எந்த நாட்டவருக்கு — எந்தக் காலத்திற்குப் பொருந்தாததாகும்?

"அறிவுடையார் எல்லா முடையார்; அறிவிலார்
என்னுடைய ரேனு மிலர்"

என்று, அறிவுடைமை என்பது பற்றி வள்ளுவர் கூறுகிறார்.

"அறிவு எனப்படுவதைத் தம்மிடம் வைத்துள்ளவர்கள் எல்லாவற்றையும் உடையவர்களாவர்; ஆனால் அந்த அறிவு என்பது இல்லாதவரோ—அவர்கள் வேறு எத்தகைய பொருட்கள் உடையவராக இருந்தாலும்—ஒன்றுமே இல்லாதவராகத்தான் இருப்பர் என்று விளக்குகிறார்.

"அறிவு என்பதனைப் பெற்றில்லாதார் வேறெதனைப் பெற்றுக்கொண்டிருந்தாலும், ஒன்றுமே இல்லாதவராகவே கருதப்படுவர் என்பது எந்தக் காலத்திற்குப் பொருந்தாக் கூற்று?—எந்த நாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத நெறி?

"இவ்வாறாக மனுதனுடைய பண்புகளை ஆராய்ந்து ஆராய்ந்து, அவனுக்குக் குறிப்பிட்ட ஒரு நிலையும், ஒழுக்கமும், பண்பும் அமைவதால்தான் அவன் வாழ முடியும் என்ற உண்மையை, உலகில் மற்றெந்த இலக்கியமும்—அவற்றை உருவாக்கியவர்களும் காட்டிராத அளவிற்கு அழகாக—தெளிவாக, திருவள்ளுவர், தமது வாழ்நெறியில் வகுத்துத் தந்திருக்கிறார்.

"வள்ளுவர் எடுத்துக்காட்டியுள்ள ஒவ்வொரு வார்த்தையையும் நாம் உற்றுக் கவனிப்போமேயானால், அவை ஒவ்வொன்றும் அழகுபட எடுத்துச் சொல்லப்பட்டுள்ளதை நாம் உணரலாம்.

"'உனக்கென்று ஒருவாழ்க்கை நிலையை உருவாக்கிக்கொண்டு இப்படி இப்படி நடந்துகொண்டால் உனக்குத் துன்பம் ஏற்படாது; இடுக்கண் இராது'—என்று வரையறுத்துக்கூறும் மற்றைய இலக்கியங்களையும், திருக்குறளையும் நாம் ஒப்பிட்டுப் பார்ப்போமேயானால், பெரும்பான்மையான மற்றைய இலக்கியங்கள், அவற்றை உண்டாக்கியவர்கள் தோன்றிய காலத்திற்கொத்த உண்மைகளை மட்டும் மனதில் கொண்டு, 'இதுதான் முடிந்த முடிவு' என்ற கருத்துடன் மட்டுமே உள்ளவை என்ற உண்மை புலப்படும்.

"'சந்தேகப்படாதே; நான் கூறுவனவற்றை நம்பு; அதனை நம்பாவிட்டால் பாபம் செய்தவனுகிறாய். பாவத்தால் நீ அடையும் கேடு—நீ நரகத்தில் தள்ளப்படுவாய்; எனவே நம்பு'—என்றுதான் மற்ற இலக்கியங்களும், அவற்றை உருவாக்கியவர்களும் கூறியிருக்கின்றனர்.

"ஆனால் திருவள்ளுவரோ, 'உலகில் எதனையும் நம்பாதே; ஒவ்வொன்றையும் உன்னுலியன்ற வரை ஆராய்ச்சி செய்து பார்; உன் ஆராய்ச்சியின் முடிவின்படி நடந்துகொள்' என்று கூறுகிறார். இவ்விதமாக, 'எந்தக் கருத்தையும் நம்பாதே; ஆராய்ந்து பார்த்து அறிவின்பாற்பட்டவை வழியாகச் செயல்படு'. என்று கூறினவர் திருவள்ளுவரைத் தவிர வேறெவரும் இருந்ததே கிடையாது.

"எந்தக் கருத்தையும்—யார் கருத்தினை, எவர் சொன்னலும் அக்கருத்தினுள் அடங்கியிருக்கும் உண்மையைக் கண்டறிந்து, அதன்பால் செயலாற்ற வேண்டும் என்ற உண்மையைத்தான் வள்ளுவர்,

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்ற தமது வாய்மொழியால் விளக்கியிருக்கிறார்.

"வள்ளுவர் காட்டும் இந்த அறிவுரைகள் எந்த நாட்டவருக்கு—எந்தக் காலத்திற்குப் பொருந்தாதவை? எனவே தான் நாம், உலகிலுள்ள மற்றெல்லா இலக்கியங்களையும், அவைகளின்மூலம் அவற்றை உருவாக்கியவர்கள் காட்டும் வாழ்நெறியைவிட வள்ளுவர் நமக்கு வகுத்துத்தந்த 'வாழ்நெறி'யை பாராட்டுகிறோம்."

(பேச்சு முடியவில்லை; நாளை வெளிவரும்)

பாகிஸ்தான் புது மந்திரி சபை

முஸ்லிம் லீக்—ஐ. மு. கூட்டுச் சேர்ந்தனர்

இந்தியர் ஒருவருக்கும் இடம் கிடைக்கிறது

கராச்சி, ஆக. 11—

முகமது அலி மந்திரி சபை பதவியினின்றும் நீக்கிய பின், சௌத்ரி முகமதலியின் தலைமையின்கீழ் பாகிஸ்தானின் முதல் கூட்டு மந்திரி சபை பதவி ஏற்றுள்ளது.

இப்புதிய கூட்டு அமைச்சரவையில் 11 அமைச்சர்கள் உள்ளனர் என்றும், அவர்களில் அறுவர் முஸ்லிம் லீகர்கள் என்றும், மற்றும் ஐவர் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்தவர்கள் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

சௌத்ரி முகமதலியைப் பிரதமராகக் கொண்ட இப்புதிய அமைச்சரவையில் 6 அமைச்சர்கள் முன்னர் முகமதுஅலி அமைச்சரவையில் அங்கம் வகித்தவர்களாம்.

டாக்டர் கான்சாகிப் முஸ்லிம் லீக் கட்சியில் துணை உறுப்பினராகச் சேர்க்கப்பட்டுள்ளாராம்.

சிறுபான்மை வகுப்பினரான இந்துக்களின் பிரதிநிதியாக, காமினி குமார தத்தா என்பவர் அமைச்சரவையில் இடம் பெற்றிருக்கிறார்.

பாகிஸ்தான் சர்க்காரில், அமைச்சராக இருந்த ஜோகேந்திரநாத் மண்டல் என்பார் தமது பதவியை 1950-ல் இராஜினாமாச் செய்த பின்னர், சிறுபான்மை வகுப்பினருக்கும் இடம் தரப்படுவது இதுவே முதன் முறையாகும் என்றும் கூறப்படுகிறது.

★

'வழி திறந்தே இருக்கிறது'

"சுஹ்ரவர்த்தியைத் தலைவராகக் கொண்ட அவாமி லீக் கட்சி மந்திரி சபையில் கூட்டுச் சேருவதற்கான வழி, எப்போதும் திறந்தே இருக்கிறது; தற்போதைய அமைச்சரவை பின்னர் விரிவுபடுத்தப்படலாம்" என்று புதிய பிரதமர் சௌத்ரி முகமதலி கூறியிருக்கிறார்.

மேலும் பாக். வானொலி நிகழ்ச்சியில் பேசிய அவர், பாக். புதிய அமைச்சரவையில் அவாமி லீக் கூட்டுச் சேராதது குறித்துத் தமது வருத்தத்தையும் தெரிவித்துக் கொண்டுள்ளாராம்.

பாகிஸ்தானின் தற்போதைய நிலையில், எல்லாக் கட்சிகளின் ஒத்துழைப்பையும் கொண்ட தேசிய சர்க்கார் அமைய வேண்டியது அவசியம் என்றும், பின்னர் அவாமி லீகும் மந்திரிசபையில் சேருவது சாத்தியமானதே என்றும் அவர் கூறியிருக்கிறார்.

குருடான குழந்தைகளுக்குக் கல்வித் திட்டம்

புதுடில்லி, ஆக. 9—

குருடு, மற்ற அங்கவீனமான குழந்தைகளுக்கான கல்விக்கு, இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் சேர்த்துக்கொள்ள இந்திய சர்க்கார் ரூ. 2 கோடி செலவில் திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளனராம்.

சபையில் பேசுவதற்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"மசோதா மீது பேசவேண்டுமென்று தாங்கள் விரும்புவதாக பல உறுப்பினர்கள் தங்கள் பெயர்களைத் தெரிவித்திருக்கின்றனர்; ஆனால், அவர்களில் எவரும் சபையில் இல்லை; இது விரும்பத்தக்கதல்ல; மசோதா மிக முக்கியமானது ஒன்று; ஆனால், அதன் மீது பேசுவதற்கு உறுப்பினர் எவருமே இல்லை" என்று தலைவர் வருத்தத்துடன் குறிப்பிட்டிருக்கிறார்.

இதற்கு முன்பாக சபையில் 'கோரம்' இல்லாததால், மணி அடித்து உறுப்பினர்களைக் கூப்பிட வேண்டியிருந்ததாம்!

கழகக் கூட்டங்கள்

★

இராசிபுரம்

புதுச்சந்தைப்பேட்டையில்

14—8—55 மாலை 5 மணிக்கு

பேசுவோர்:
ஈ. ஆர். கிருஷ்ணன்
சிற்றுளி ஏ. சுப்பிரமணியம்

★

வேலூர்

திராவிட நகரில்
(தோல் கிடங்கு தெரு)

14—8—55 மாலை 6 மணிக்கு

தலைவர்: மா. பா. சாரதி

பேசுவோர்:
போளூர் கே. சுப்பிரமணியம்
கேசவன்
அ. கருத்தோவியன்
அ. பாலகிருட்டிணன்

★

ஆம்பூர் (வ. ஆ.)

மகமதலி மைதானத்தில்

14—8—55 மாலை 6½ மணிக்கு

பேசுவோர்:
அருண்மொழி
பசுல்

★

பொள்ளாச்சி

தேர் நிலையில்

14—8—55 மாலை 7 மணிக்கு

பேசுவோர்:
கி. மனோகரன்
வி. சண்முகநாதன்
க. துரைக்கண்ணன்

★

பொட்டனேரி (சேலம் மா.)

15—8—55 மாலை 5½ மணிக்கு

தலைவர்: இரா. சேகன்னுதன்

பேசுவோர்:
காஞ்சி-கல்யாணசுந்தரம்
சிற்றுளி அ. சுப்பிரமணியம்

தி.மு.க. பொதுச்செயலாளர்

நெடுஞ்செழியன்

அருப்புக்கோட்டை வருகை

★

14—8—55 மாலை 6 மணிக்கு, அருப்புக்கோட்டை, பாண்டியன் திடலில், W. P. A. சௌந்திரபாண்டியனார் நினைவு படிப்பக இரண்டாவது ஆண்டு நிறைவு விழா, தோழர் இ. ல. ம. சௌந்திரபாண்டியன் தலைமையில் நடைபெறும். பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் சொற்பொழிவாற்றுவார்.

கடலூர் நகர தி. மு. கழக செயற் குழு உறுப்பினர்கட்கு

14—8—55 மாலை 3 மணிக்கு, கடலூர் நகர தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம், கடலூர் ஓ. டி. 1-வது வட்ட தி. மு. கழக அலுவலகத்தில், தோழர் சாமிநாதன் தலைமையில் நடைபெறும். அதுபோது, மாநில மாநாட்டு நிதிக்கு, கடலூர் நகர தி. மு. கழகம் தன்னுடைய பங்குத் தொகையை செலுத்துவதுபற்றி ஆலோசிக்கப்படும்.

சென்னை 17-வது வட்ட தி. மு. கழகச் செயற் குழு உறுப்பினர்கட்கு

15—8—55 காலை 10 மணிக்கு சென்னை 17-வது வட்ட தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம் நடைபெறும். அதுபோது, கழக வரவு-செலவு, வட்டத்தின் தற்கால நிலை ஆகியவை பற்றி விவாதிக்கப்படும்.

இலக்குமணபுரி (பெங்களூர்) தி.மு. கழக உறுப்பினர்கட்கு

15—8—55 காலை 10 மணிக்கு, இலக்குமணபுரி(பெங்களூர்) தி. மு. கழக உறுப்பினர் கூட்டம் நடைபெறும்.

சி. என். அண்ணாதுரை

மதுரை வெற்றிலை பாக்கு பீடி சிகரெட் வர்த்தகர் சங்க ஆண்டு விழாவில் கலந்துகொள்வார்

14—8—55 காலை 10 மணிக்கு, மதுரை விக்டோரியா எட்வர்டு ஹாலில் (ரீகல் டாக்கீஸ்), மதுரை வெற்றிலை பாக்கு பீடி சிகரெட் வர்த்தகர் சங்கத்தின் 13-வது ஆண்டு விழா திரு. பி. எஸ். கே. லட்சுமிபதி ராஜு தலைமையில் நடைபெறும். தோழர்கள் சி. என். அண்ணாதுரை, கே. ராஜாராம், வி. சந்தானம், விசேதாஸ், கே. கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் பேசுவர்.

திரு. வி. க. பிறந்த தின விழா

14—8—55 அன்று, பெரம்பூர் பாரக்ஸ், திரு. வி. க. மறுமலர்ச்சி மன்றத்தாரால், திரு. வி. க. பிறந்த தின விழாக் கூட்டம் நடைபெறும். காலை நிகழ்ச்சி: காலை 7 மணிக்கு, மேற்படி மன்றத்தில், (மகாலட்சுமி, சரஸ்வதி தியேட்டர்கள் அருகில்) கதம்பக் கச்சேரி தோழர் பி. கே. பரமானந்தம் குழுவினரால் நடைபெறும். காலை 8 மணிக்கு, விழாக் கூட்டம், தோழர் ஜி. முனுசாமி தலைமையில் நடைபெறும். தோழர்கள் க. அப்பாதுரை, கே. எம். கண்ணபிரான், ஜி. செல்வபதி, எஸ். பக்கிரிசாமி எம்.எல்.ஏ., டி. நடராசன், ந. கோவிந்தன் ஆகியோர் பேசுவர்.

மாலை 6 மணிக்கு, திரு. வி. க. திடலில், (கான்ரான்ஸ்மித் மைதானம்) தோழர் க. வரதன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் என். வி. நடராசன், கண்ணதாசன், பி. சி. கல்யாணசுந்தரம், (வனேயாம்பதி) ஜி. முத்துகிருஷ்ணன், டி. எஸ். சண்முகம், கதிர். டி. சுப்ரமணியம் ஆகியோர் பேசுவர். இத்துடன், செந்தமிழ் இளைஞர் கலைக் கழகத்தாரின் ஓரங்க நாடகம் நடைபெறும்.

கலை வளர்ச்சி நாடக மன்ற 5-ம் ஆண்டு விழா

14—8—55 காலை 8 மணிக்கு, சென்னை-சூளை, எண் 31, கலியாண மேஸ்திரி தோட்டத்தில், தோழர் எம். வரதராசலு தலைமையில் நடைபெறும். தோழர்கள் இளம்பரிதி, மு. கன்னியப்பன், மா. து. இராசன், பி. வேணுகோபால் மற்றும் பலர் பேசுவர்.

வட சென்னை குறள் நெறிக் கழகம்

13—8—55 மாலை 6 மணிக்கு, சென்னை-இராயபுரம், எண் 59, மன்னார்சாமி கோயில் தெருவிலுள்ள மேற்படி கழக அறையில், தோழர் ம. அமலன் தலைமையில், 'பெரியோரைத் துணைக்கோடல்' என்பது பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

14—8—55 காலை 10 மணிக்கு, மேற்படி கழக அறையில், தோழர் கி. தியாகராசன் குறள் வகுப்பு நடத்துவார்.

சொற் பயிற்சிக் கூட்டம்

14—8—55 இரவு 8 மணிக்கு, (வண்ணை) கே. எஸ். பாண்டியன் பகுத்தறிவுப் படிப்பக பணிமனையில், தோழர் பி. எம். இராமையா தலைமையில், 'புரட்சி' என்னும் பொருள் பற்றி படிப்பக உறுப்பினர்கள் பேசுவர்.

சொற் பயிற்சி மன்ற துவக்க விழா

14—8—55 மாலை 4 மணிக்கு, களூர் தி. மு. கழக (கிளை).கட்டிடத்தில், தோழர் எம். கே. கரிகாலன் தலைமையில், 'தனமனோகரன்' சொற் பயிற்சி மன்ற துவக்க விழா நடைபெறும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு; இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.